முறைகளைப் புகுத்தியிருக்கிறோம். அகவே, அவர்களுடைய மேலான யோசனையையும் இந்த அரசு கருத்தில் கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... ... ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள்தான் ஏற்கனவே பேசிவிட்டீர்களே, இது ஹைவேசில் இல்லை, உள்ளாட்சித் துறையில் இருக்கிறது என்று இருந்தாலும், நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார்.

வினா எண் 272 திரு. கே.முனிவெங்கடப்பன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

272—

கிருட்டிணகிரி நகருக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கல்.

*10577—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி நகரில் போதுமான அளவு குடிநீர்வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது எவ்வளவு மதிப்பீட்டில் நிறைவேறும்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நகரமானது தர்மபுரி மாவட்டத்திலே மிகப் பெரிய நகரமாகும். 20 ஆண்டுகளுக்கு முன்பு இணைக்கப்பட்ட தண்ணீர் வசதிதான் இருக்கிறது. 100 பேர்களுக்கு 50 விழுக்காடுதான் தண்ணீர் கொடுத்துக் கொண்டு வருகின்றோம். மேலும் அருகிலே இருக்கின்ற டயரிக்கு இங்கே வருகின்ற நகராட்சி தண்ணீரை 1 லட்சம் லிட்டரை ஒவ்வொரு

1993 ஏப்ரல் 7]

தினமும் எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே, வந்து போகின்ற மக்களுடைய 'Floating Population' மிக அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இந்தத் திட்டத்தை, ஏற்கெனவே ஒரு திட்டமானது மதிப்பீடு செய்யப்பட்டு நிலுவையிலுள்ளது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிவித்து அது இவ்வாண்டு செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.45

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்துமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் நகராட்சி கோரியுள்ளது. கிருஷ்ணகிரி நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் ஆய்வு மதிப்பீடு 5,84,600 ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வாரிய விதிகளின்படி நகராட்சியிடமிருந்து இந்த ஆய்வு மதிப்பீட்டுத் தொகை பெறப்பட்ட பின் தான் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள முடியும். கிருஷ்ணகிரி நகராட்சி ஆய்வுத் தொகையாக 70 ஆயிரம் மட்டும் இதுவரை செலுத்தியுள்ளது. மீதித் தொகை 5,14,600 ரூபாயைச் செலுத்துமாறு கிருஷ்ணகிரி நகராட்சியிடம் கோரப்பட்டுள்ளது. நகராட்சி நிதிநிலை சரியில்லாத காரணத்தால், மீதித் தொகையை அரசு சுழற்சி நிதியிலிருந்து பெற்றுத் தருவதாக நகராட்சி அறிவித்திருக்கிறது. ஆய்வுத் தொகை முழுவதும் பெறப்பட்ட பின் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் 1947 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சர் பொறுப்பில்லாது இருந்த அந்த மாவட்டத்தை, அமைச்சர் பொறுப்புத்தானே நீங்கள் கேட்கிறீர்கள், இந்தத் தமிழ்நாட்டிற்கே ஆணையிடுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற புனிதத் தலைவி எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியிலே இந்தத் திட்டத்தை வேறு எந்தத் திட்டத்திலாவது கொண்டு வந்து உடனடியாக குடிநீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 273, திரு. ம. தனபால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.